**செய்தி வெளியீடு எண்:560** **நாள்: 29.08.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

<u>திரு. ஆரோக்கிய ராஜிவ், அவர்களுக்கு மத்திய அரசு அர்ஜுனா விருது வழங்கியதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.8.2017) திரு. ஆரோக்கிய ராஜிவ் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:</u>

“2014-ஆம் ஆண்டு இன்சியான் ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், 2017-ஆம் ஆண்டில் ஒரிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் 4x400 மீட்டர் தொடர் ஓட்டப் பந்தயந்தில் தங்கப்பதக்கத்தையும், 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள தங்களுக்கு இந்திய அரசு அர்ஜுனா விருது வழங்கி கௌரவித்துள்ளதற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தருணத்தில் தாங்கள் தடகளப் போட்டிகளில் மேன்மேலும் பல வெற்றிகளைக் குவித்து சாதனை சிகரங்களைத் தொட எனது அன்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**
**நாள் : 29.8. 2017**